ஏப்ரல்- ஜூன்-2023-ஆம் மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization for the month of Apirl-June- 2023)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்
சென்னை – 600 009.

**கடித எண்.4768/பக5(1)/2023-1, நாள் 28.04.2023.**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி - 2020-2021 ஆம் கல்வியாண்டில் 45 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது – இப்பள்ளிகளில் ஐந்து அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.11, பள்ளிக் கல்வி [ப.க.2(.2)]த் துறை, நாள்: 18.01.2021.

2. அரசாணை (நிலை) எண்.61, பள்ளிக் கல்வி[பக2(2)]த் துறை, நாள் 26.02.2021.

3. அரசாணை (நிலை) எண்.253, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள் 12.10.2022.

4. பள்ளிக்கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.070122/எல்/இ3 /2022, நாள்: 06.04.2023.

----------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை இரண்டில் காணும் அரசாணையில் கீழ்க்காணும் ஐந்து

அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

| | |
|---|---|
| 1 | அரசு உயர்நிலைப் பள்ளி, கொங்கர்பாளையம், தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஈரோடு மாவட்டம். |
| 2 | அரசு உயர்நிலைப் பள்ளி, கீழ்மாம்பட்டு, வல்லம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம். |
| 3 | அரசு உயர்நிலைப்பள்ளி, பனையூர், நரிக்குடி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம். |
| 4 | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, கெடார், காணை ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம் |
| 5 | அரசு உயர்நிலைப் பள்ளி, பாலி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம். |

மேலும் தரம் உயர்த்தப்படும் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளுக்கு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.36,900-1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில் உள்ள உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை, ரூ.56,900-1,80,200 (நிலை-23) என்ற ஊதிய நிலையில், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி அனுமதித்தும், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.36,900-1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில், 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல்) வீதம் 45 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், மற்றும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.36,900-1,16,600 (நிலை 18) என்ற ஊதிய நிலையில், 1 கணினி பயிற்றுநர் (நிலை 1) பணியிடம் வீதம் 5 பணியிடங்களும் ஆக மொத்தம் 55 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேற்படி 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு ஏப்ரல்-2023 ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்குறிப்பிட்டுள்ள 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2023 வரை மேலும் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், பார்வை இரண்டில் காணும் அரசாணையில் தரம் உயர்த்தப்பட்ட ஐந்து மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட 55 தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜூன்-2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல், மே மற்றும் ஜூன்-2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334, நிதி(வ.செ. பொது-I), நாள் 22.10.2022 இன்படி நிதித் துறையின் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

தங்கள் நம்பிக்கையுள்ள,

28/4/23

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

28.4.23

**நகல்**

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

நிதி(கல்வி-II)த் துறை, சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க:- இணை இயக்குநர் ந.க.எண்: 070122/எல்)இ3/22 நாள்: 28.04.23

பெறுநர்:-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்.

Joint Director (NSS), 12
Commissionerate of School Education,
Chennai-600 006. 28/4/23

28/4/23